# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்



## உத்தரக்ருத்யம்
### குறிப்புகள்

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை

ஆகிஞ்சன்ய அனுஸந்தானம் முதலியவற்றால் கார்ப்பண்யத்தை விடாது இருத்தல் :

1. கார்பண்யமாவது ஆகிஞ்சன்யமும் அநந்ய கதித்வமும் கொண்ட ஒரு சரணாகதனின் நிலை;

# ஆகிஞ்சன்யம்: மோக்ஷத்தில் ஆசை கொண்ட தான், 'கர்ம யோகம்' மற்றும் 'ஞான யோகத்தை' அங்கங்களாகக் கொண்ட 'பக்தி யோகத்தை' செய்ய தகுதி அற்றவன் என்ற உணர்த்தியால் தெளிந்த தன் இயலாமை

# அநந்ய கதித்வம்: வேறொரு போக்கு அற்றவனாக ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் க்ருபை உண்டாகுமாறு தாழுந்து நிற்றல்.

2. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் கட்டுப்பாட்டில் உள்ள, தன் ஸ்வரூப (இருப்பு), ஸ்திதி (இருப்பின் நீடிப்பு) மற்றும் ப்ரவ்ருத்தியிலே (செயல்களாலே) கூடின ஆகிஞ்சன்ய மற்றும் அநந்ய கதி அனுஸந்தானம் (நினைவில் கொள்ளுதல்) ஸதா செய்து போக வேண்டும். இதுவும் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

3. 'இவையன்றே நல்ல இவையன்றே தீய, இவையென்றிவையறிவனேலும் – இவையெல்லாம் என்னால் அடைப்புநீக் கொண்ணா திறைவனே, என்னால் செயற்பால தென்?' அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த பெரிய திருவந்தாதியில் கூறியபடி, 'நல்லனவும் தீயனவும் நான் அறிந்திருப்பினும், நல்லவற்றைக் கை கொள்ளவோ தீயவற்றை விலக்கவோ என்னால் முடியாது.'

4. 'களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன், வளைவாய் நேமிப் படையாய் குடந்தைக் கிடந்தாய்! மாமாயா! தளரா உடலம் எனதாவி சரிந்து போம்போது இளையா துனதாள் ஒருங்கப் பிடித்துப் போதஇசை நீயே' அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி, 'என்னுடைய கர்மாவின் அடிப்படையில், ஸர்வேஸ்வரனான நீ கொடுக்கும், என் துன்பங்களைக் களைவாயோ மாட்டாயோ, அது உன் இஷ்டம். நீ தான் என்னை வழி நடத்துபவன் என தெளிந்துவிட்டேன். எனது உடல் தளர்ந்து வீழ்கின்றபோது, என் கார்ப்பண்யம் குலையாமல் இருக்க, நீ அருள இசைவாயாக.'

5. 'தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை. விரைகுழுவும் மலர்ப் பொழில்சூழ் வித்துவக் கோட்டு அம்மானே, அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும், மற்றவள்தன் அருள் நினைந்தே அழும் குழவி அதுவேபோன்று இருந்தேனே!' அதாவது, குலசேகர ஆழ்வார் அருளிச்செய்த பெருமாள் திருமொழியில் கூறியபடி, 'ஒரு தாயானவள் கோபத்தினால் தன் சிறு குழந்தையை அகற்றினாலும், அது எப்படி தன் தாயின் கால்களையே பற்றி அழுமோ அது போல் நீ

என்னுடைய கர்மத்தின் அடிப்படையில் எனக்கு துக்கத்தை கொடுத்து வந்தாலும் அநந்ய சரணனாக நான் உன் திருவடிகளையே பற்றி நிற்பேன்'

6. 'நமோ நமோ வாங் மனஸாதி பூமயே, நமோ நமோ வாங் மனசைக பூமயே, நமோ நமோ அநந்த மஹா விபூதயே, நமோ நமோ அநந்த தயைக சிந்தவே, ந தர்ம நிஷ்ட்டோஸ்மி ந சாத்ம வேதீ, ந பக்திமாம் ஸ்தவச சரணாரவிந்தே, அகிஞ்சநோ அநந்ய கதிஸ் சரண்ய, த்வத் பாத மூலம் சரணம் ப்ரபத்யே.' என்று ஸ்ரீ ஆளவந்தார் அருளிய ப்ரகாரம், 'நான் கர்ம, ஞான, பக்தி யோகங்களை அனுஷ்டிக்க தகுதி அற்றவன் என்ற உணர்த்தியால், வேறொரு போக்கு அற்றவனாக ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் க்ருபை உண்டாகுமாறு உன் திருவடிகளை சரணமாகப் பற்றுகிறேன்'

இவ்வாறு அருளின நம் ஆசார்யர்கள் மற்றும் ஆழ்வர்கள் ஸ்ரீஸூக்திகளிலிருந்து ஆகிஞ்சன்ய, அநந்ய கதி அனுஸந்தானம் (நினைவில் கொள்ளுதல்) உத்தரக்ருத்யமாக சரணாகதன் ஸதா செய்து போக வேண்டும் என தெளிவாகிறது.

அநாதி காலமாக தான் தகுதி இழந்ததை நினைத்து தளராமல் இருத்தல் :

1. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, இப்படி தனக்கு பல ஜன்மங்களாக இழந்த தெளிவான ஞானத்தையும் அதன் காரணமாக ஏற்பட்ட ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் கைங்கர்ய (சேவை) இழப்பை நினைத்து மனம் தளராதே பகவத் அவதார ரஹஸ்யங்களை சிந்தித்து தேற வேண்டும்.

2. கண்ணன் கீதையில் தன் அவதார ரஹஸ்யத்தை அர்ஜுனனுக்கு அருளிச் செய்தது :

'பஹூநிமே வ்யதீதானி ஜன்மானி தவ சார்ஜுந. தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப'. 'அஜோபி ஸந் அவ்ய்யாத்மா பூதானாமீஸ்வரோபி ஸன். ப்ரக்ருதிம் ஸ்வாம் அதிஷ்டாய ஸம்பவாமி ஆத்ம மாயயா'. 'யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர் பவதி பாரத. அப்யுக்தானாம் அதர்மஸ்ய த்தாத்மானம் ஸ்ருஜாம்யஹம்'. 'பரித்ராணாய ஸாதூனாம் வினாஷாயச துஷ்க்ருதாம் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே'. 'ஜன்ம கர்ம சமே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்வத: த்யக்த்வா தேகம் புநர் ஜன்ம நைதி மாமேதி ஸோர்ஜுந'. என்று கண்ணன் அருளினான்.

அதாவது, 'பல பிறவிகள் எனக்கும் போயின. உனக்கும் போயின. அந்த பிறவிகளை எல்லாம் நான் இப்போதும் அறிகிறேன். நீ அறிவதில்லை'. 'நான் பிறவி அற்றவனே ஆகிலும், எல்லோருக்கும் ஈஸ்வரனாயும் இருக்கும் நான், அப்ராக்ருத ( ஶுத்த ஸத்வ) திருமேனியுடன் என் இச்சையினால் மட்டுமே அவதரிக்கிறேன்'. 'எப்பொழுது எல்லாம் தர்மத்திற்கு வாட்டம் ஏற்படுகிறதோ, அதர்ம்ம் தலை தூக்குகிறதோ அப்போதெல்லாம் நான் அவதரிக்கிறேன்'. 'அடியார்களை காக்கவும், துஷ்டர்களை அழிக்கவும், தர்மத்தை நிலை நிறுத்தவும் யுகம் தோரும் நான் அவதரிக்கிறேன்'. 'ஸதா அவதார சிந்தனம் செய்யும் பக்தி யோக நிஷ்டன், சரீரத்தை விட்ட பிறகு கர்மத்துக்கு ஆட்பட்டு மறுபிறவி அடைவதில்லை; என்னையே அடைகிறான்' என்று கண்ணன் அருளினான்.

3. 'பொய் நின்ற ஞானமும்,  பொல்லா ஒழுக்கும் அழுக்கு உடம்பும், இந் நின்ற நீர்மை,  இனி யாம் உறாமை, உயிர் அளிப்பான்- எந் நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா! மெய்ந் நின்று கேட்டருளாய்,  அடியேன் செய்யும் விண்ணப்பமே.' அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவிருத்தில் கூறியபடி, 'எம்பெருமானே! ஸம்ஸார பந்தத்துக்கு காரணமான தவறான எண்ணங்களும், அதனால் ஏற்பட்ட தீய ஒழுக்கங்களும், அதனால் உண்டான இந்த சரீர சம்பந்தங்களும், இனி நான் அடையாத படி இருக்க, நீ பல்வேறு அவதாரங்களைச் செய்தாய்.

4. 'யத் யௌவநே சரதி விப்ரமேண ஸத் வா அஸத் வா யாத்ருஷம் வா யதா வா. உத்தமே சேத் வயஸி ஸாது வ்ருத: ததேவாஸ்ய பவதி நேத்ராணி.' அதாவது, 'ஒருவன் இளமையில் எவ்வாறு இருந்தாலும் முதிய வயதில் நல்ல எண்ணங்களும் அதனால் வரும் நல் ஒழுக்கங்களும் ஏற்பட்டால் அது அவனுக்கு நன்மை தரும்.'

5. 'துராசாரோபி சர்வாசீ கருதக்னோ நாஸ்திக புரா. சமாஸ்ரயேதாதி தேவம் ஸ்ரத்தயா   சரணம் யதி. நிர்தோஷம் வித்தி  தம் ஜந்தும் பிரபாவாத் பரமாத்மன', என்றபடி, 'ஒருவன் பரம நாஸ்திகனாயும் ஒழுக்கமற்றவனாயும் ஒரு காலத்தில் இருந்தாலும், பின்பு எம்பெருமானை உணர்த்தியுடன் சரண் அடைந்தால், அவன் எம்பெருமானின் பெருமையால் குற்றம் அற்றவன் ஆகிவிடுகிறான்.'

6. 'நாளும் நின்றடு நம் பழமை அங்கொடு வினையுடனே, மாளும் ஓர் குறைவில்லை மனனகமல மறக் கழுவி, நாளும் நம் திருவுடையடிகள் தம் நலம் கழல் வணங்கி, மாளும் ஓர் இடத்திலும் வணக்கொடு மாள்வது வலமே', அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி, 'பாபத்தை போக்க எம்பெருமானை சரண் அடைந்த பின்பு என்ன குறை? தன் ஸ்ரூபத்திற்கு ஏற்ற ஆக்ஞா கைங்கர்யம் (ஸந்த்யாவந்தனம், ஸ்ரார்தம் போன்றவை) மற்றும் அனுக்ஞா கைங்கர்யம் (ஞான சம்பாத்யம், கோவில் தரிசனம் போன்றவை) அனைத்தும் எம்பெருமானின் உகப்பை கருதியே செய்ய வேண்டும். தடங்கல் ஏற்பட்டாலும் வருந்த வேண்டாம். எம்பெருமானுக்கு ஒரு அஞ்சலி (கை கூப்புவது) போதுமானது'. இழந்ததை நினைத்து மனம் தளராமல், பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பதும் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

இந்த்ரியங்களைக் (புலன்களை) கட்டுப் படுத்தி உரிய விஷயங்களில் பயன் படுத்துதல்:

1. ஒரு சரணாகதன், புலன்களைக் கட்டுப் படுத்தி உரிய விஷயங்களில் பயன் படுத்துதல் அவசியம். இந்த செயலினால் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருப்பதும் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. உலகில் இருக்கும் அனைவரும், ப்ரக்ருதியால் ஆன முக்குணங்கள் ( அதாவது ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ்) கூடிய, சரீரம் உடையவர்கள். ப்ரக்ருதி, சரீரமாக ஆகும் போது, அவரவர்களுடைய கர்மாவிற்கு ஏற்ப, வெவ்வேறு விகிதங்களில் ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற குணங்கள் உருவாகி புலன்கள் மூலமாக ஒவ்வொருவரையும் கட்டுப் படுத்துகிறது. அதனால் அதற்கேற்ப மாறுபட்ட குணங்களை உடையவர்களாகவே இருக்க் கூடியவர்கள் ஆகிறார்கள். சரீரத்தில் ஸத்வ குணம் மேலிடும் தருணத்தில் அவரவர்களுக்கு நற்குணங்கள் வெளிப் படுகின்றன. அதாவது, உயர்ந்தவர்ளை அவமதியாது, புகழுக்காக தர்ம கார்யம் செய்யாமை, பிறரை

நலியாமை, பொறுமை, எண்ணம் சொல் செயலின் ஒற்றுமை, ஆசார்யனிடம் பக்தி, சாஸ்த்ரப்படி ஸுத்தி, சாஸ்த்ரத்தில் நம்பிக்கை, புலனடக்கம் என்றவைகள். இந்த ஸத்வ குண வளர்ச்சியால், தன்னையும் (ஜீவாத்மா - சேதன தத்வம்), ப்ரக்ருதியையும் (அசேதன தத்வம்) மற்றும் ஸர்வேஸ்வரனையும் (பரமாத்மா - ஈஸ்வர தத்வம்) அதற்கே உண்டான அஸாதாரண தன்மைகளைக் கொண்டு, பிழையற, தெளிவாக சாஸ்த்ரத்தின் வாயிலாக ஒரு ஸதாசார்யன் மூலமாக அறிவதற்கு பயன் படுகிறது.

3. 'முடியானே மூவுலகும் தொழுது ஏத்தும் சீர் , அடியானே ஆழ் கடலைக் கடைந்தாய் புள் ஊர் , கொடியானே கொண்டல் வண்ணா அண்டத்து உம்பரில் , நெடியானே என்று கிடக்கும் என் நெஞ்சமே' அதாவது, ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில், அனைத்து புலன்களாலும் அனைத்து விதத்திலும் ஸர்வேஸ்வரனை அனுபவிக்க எண்ணி அவனை அழைக்கிறார். இந்த ப்ராக்ருத சரீரத்தில், ஸத்வம், ரஜஸ் மற்றும் தமஸ் என்ற குணங்கள் பிணைந்து இருந்தாலும், நாம் உட்கொள்ளும் ஆகாரங்கள் குணங்களை மேலும் வளரச் செய்கின்றன. ஸத்வ குணம் மேலோங்கினால் ஸர்வேஸவரனின் ஸ்வரூப ஸ்வபாவங்களை சாஸ்த்ரத்தாலே அறிந்து, அவனை சரண் அடைந்து உத்தரக்ருத்யத்தை சரிவர நடத்த முடியும் என கருத்து.

4. முக்குணங்களாலான ப்ரக்ருதி சம்பந்தமுடைய புலன்களைக் கட்டுப் படுத்தி, பகவத் கைங்கர்யங்களில் பயன் படுத்துதல் ஒரு சரணாகதனுக்கு உத்தரக்ருத்யமாகும். கண்ணன் கீதையில் ஸத்வ குணத்தை வளர்க்க அர்ஜுனனுக்கு அருளிச் செய்த வழிகள் : 'ஆயு:ஸத்த்வபலாரோக்யஸுகப்ரீதிவிவர்தநா: ரஸ்யா: ஸ்நிக்தா: ஸ்திரா ஹ்ருத்யா ஆஹாரா: ஸாத்த்விகப்ரியா:'. 'கட்வம்லலவணாத்யுஷ்ணதீக்ஷ்ணரூக்ஷவிதாஹிந: ஆஹாரா ராஜஸஸ்யேஷ்டா து:கஸோகாமயப்ரதா:'. 'யாதயாமம் கதரஸம் பூதி பர்யுஷிதம் ச யத் உச்சிஷ்டமபி சாமேத்யம் போஜநம் தாமஸப்ரியம்'. அதாவது,

# 'தெளிவான ஞானம் மற்றும் அனுஷ்டானம், மன அமைதி, மனத்தில் ஒரு சந்தோஷம், உடல் ஆரோக்கியம் இவைகள் வளர்வதற்கு ஸாத்வீக ஆகாரம் உட்கொள்ள வேண்டும்; அதாவது, இனிப்புகள், பசுமையானவைகள், உணவு செய்து வெகு காலம் ஆகாதவைகள், ஆகாரம் உட்கொள்ளும் இடத்தின் சுத்தம், ஸர்வேஸ்வரனுக்கு நிவேதிக்கப் பட்டவைகள் ஸாத்வீக ஆகாரமாகும்'.

# 'உலக விஷயத்தில் மட்டுமே மிகுந்த ஈடுபாடு, எப்போதும் மனத்தில் ஏதோ ஒரு கலக்கம், அடிக்கடி உடல் ஆரோக்கிய குறைவு முதலியன வளர்வதற்கு ராஜஸ ஆகாரம் காரணமாகும்; அதாவது, அதிகமான அளவில் கசப்பு, உப்பு, காரம், புளிப்பு போன்றவைககள், அதிக சூடு அல்லது அதிக குளுமையான பதார்த்தங்கள், உலர்ந்தவைகள் ராஜஸ ஆகாரமாகும்'.

# 'தத்வ விஷயத்தில் உண்மைக்கு மாறான அறிவு கொள்வது, எல்லாவற்றிலும் தெளிவு இல்லாத நிலை, கர்மானுஷ்டானங்களை சரிவர அறிந்து செய்ய முடியாத ஒரு சோம்பல் முதலியன வளர்வதற்கு தாமஸ ஆகாரம் காரணமாகும்; அதாவது, பழைய உணவு, சுவையை இழந்த உணவு, கெட்டுவிட்ட உணவு, மற்றவர்களின் எச்சில் உணவு, ஸவேஸ்வரனுக்கு அர்ப்பணிக்காத உணவு தாமஸ ஆகாரமாகும்'.

கைங்கர்யங்களை சாஸ்த்ர முறைப்படி உகந்து செய்தல் :

1. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, பகவத் கைங்கர்யங்களாகிற நித்ய (சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள்) , நைமித்திக (சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸ்ரார்தம், ஏகாதசி விரதம் போன்றவை) மற்றும் காம்ய (ஞான சம்பாத்யம், கோவில் செல்லுதல் போன்றவை) கர்மங்களை செய்யும் போது, சாஸ்த்ர முறைப்படி உகந்து செய்தல் மிக அவசியம். இந்த சாஸ்த்ர முறைப்படி உள்ள பகவத் கைங்கர்யம் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. உதாரணமாக, வேறொரு இடம் செல்ல இருப்பவன், வாகனத்திற்காக காத்திருக்கும் போது, 'பொழுது போக்கிற்காக' சதுரங்கம், சீட்டு போன்ற சூதாட்டத்தில் ஈடுபட்டாலும், பணம் வைத்து ஆடுபவர்கள், விளையாட்டின் விதிமுறைகளின் படி எப்படி ஆடுவார்களோ, அந்த வதிமுறைகளைப் பின்பற்றியே இவனும் ஆடுவான் அல்லவா? அதே போல் ஒரு சரணாகதன், இங்குள்ள காலம் தன் ஸ்ரூபத்திற்கு ஏற்ற ஆக்ஞா கைங்கர்யம் (ஸந்த்யாவந்தனம், ஸ்ரார்தம் போன்றவை) மற்றும் அனுக்ஞா கைங்கர்யம் (ஞான சம்பாத்யம், கோவில் தரிசனம் போன்றவை) அனைத்தும் எந்த ஒரு உலக பலனையும் எதிர்பார்க்காது, எம்பெருமானின் உகப்பை கருதியே, 'நற் போது போக்காக' செய்தாலும், சாஸ்த்ர முறைப்படியே செய்ய வேண்டும். அதாவது, ஒரு சரணாகதன் பயணிக்க வேண்டிய இடம் பரமபதம்; அவன் எதிர்பார்த்து காத்திருக்கும் வாகனம் இந்த சரீரத்தை துறந்தவுடன் கிடைக்கப் பெறும் சூக்ஷ்ம சரீரம். பொழுது போக்கிற்காக இங்குள்ள காலம் அவன் செய்வது சாஸ்த்தர முறைப்படி பகவத் ப்ரீதிக்காக கைங்கர்யங்கள்.

3. 'தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்ய அகார்ய விவஸ்திதௌ. க்ஞாத்வா சாஸ்த்ர விதானோக்தம் கர்ம கர்தும் இஹ அர்ஹஸி' என்று கண்ணன் கீதையில் அர்ஜுனனுக்கு உபதேசிக்கிறான்.

அதாவது,

'தர்ம சாஸத்ரத்தில் விதித்தபடி 'எது எவ்வாறு செய்ய தக்கது' மற்றும் 'எது செய்யத் தகாதது' என்பதை அறிந்து அதற்கேற்ப செயல் படவேண்டும்'. இதன் தாத்பர்யம், சாஸ்த்ரத்தை மட்டுமே ப்ரமாணம், அதாவது நம்பத் தகுந்த அத்தாட்சி, என்று கண்ணன் கூறுகிறான்.

4. உலகத்திலும் ப்ரமாணங்கள் ( நாம் நம்பத் தகுந்த அத்தாட்சிகள்) மூன்று வகைகளாக உள்ளன:

# ப்ரத்யக்ஷம் ( நம் புலன்களால் அறியக் கூடியவை - உதாரணமாக, 'என் கண்ணால் பார்த்தேன்' என்றும், 'என் காதால் கேட்டேன்' என்றும் உறுதி அளிக்க நாம் கூறக் கேட்டிருக்கிறோம்.)

# அனுமானம் (ஒரு காலத்தில் நாம் புலன்களால் அறிந்தவற்றை வேறொரு காலத்தில் நாம் அனுமானிக்கிறோம் - உதாரணமாக, ஏதோ ஒரு காலத்தில் நெருப்பையும் புகையையும் சேர்த்து கண்ட நாம், வேறொரு காலத்தில் புகையைக் கண்டவுடன் அங்கு நெருப்பு இருப்பதாக அனுமானிக்கிறோம்.)

# சப்தம் (ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானத்தால் நிச்சயிக்கப் பட முடியாதவற்றை, நம்மிடம் அளவு கடந்த அன்பு உடைய, ஒரு நற் பலனையும் நம்மிடம் எதிர்பார்க்காத, நம் நலனில் மட்டுமே ஆர்வம் கொண்ட ஒருவரால் சொல்லப் படும் நல்வார்த்தையைக் கொண்டு நம்புகிறோம் - உதாரணமாக, ஒரு குணவதியான தாய், தன் குழந்தையிடம் அந்த குழந்தையின் தந்தையை அறிமுகப் படுத்தவதை ப்ரத்யக்ஷ அனுமானத்தினால் அறியப்பட முடியாத 'சப்த ப்ரமாணம்' ஆகும்)

ப்ரத்யக்ஷம் மற்றும் அனுமானத்தால் அறிய முடியாத ஆத்ம விஷயங்களையும், ஸர்வேஸ்வரனை பற்றிய விஷயங்களையும், சாஸ்த்ரம் என்ற சப்த ப்ரமாணத்தைக் கொண்டே அறிய வேண்டும்.

இந்த காரணங்களினால், சாஸ்த்ர ஞானத்தை பெறுவதற்கு வேத வேதாந்தங்களை பிழையற

அறிந்த ஆசார்யர்களின் சம்பந்தம் தேவையாகிறது. இல்லையென்றால் சாஸ்த்ரங்களை அறிவதில் பிழைகள் ஏற்பட வாய்ப்புண்டு. அவரவர்கள் அதிகாரத்திற்கு ஏற்ற கர்மாக்களை ( தினசரி செய்ய வேண்டுபவன, ஒரு சில காலத்தில் செய்ய வேண்டுபவன, மோக்ஷத்திற்கான அனுஷ்டானம், பகவத் கைங்கர்யமான அனுஷ்டானம் போன்றவை) சாஸ்த்ர விதிப்படித் தான் செய்து போக வேண்டும். கைங்கர்யம் தன் மனம் போனபடி செய்யலாகாது. அது கைங்கர்யமா கா து.

1. அர்ச்சாவதாரத்திற்கே கைங்கர்யம் புரிதல் : ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோ மா க்ஷ பலனு க்கா க கா த்திரு ப் ப வ ன்) எ ன்ற எ ண் ண த் தோடு, இங்குள்ள கோவி ல்களி ல் ஆகம சாஸ்த்ரப்படி அமைத்த அர்ச்சா ரூப மூர்த்திக்கு (க்ருஹத்தில் உள்ள சாளக்ராம பெருமாளும் அர்ச்சா ரூப மூர்த்தி தான்), கைங்கர்யம் செய்வது உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. ஸ ர் வே ஸ் வ ர ன ா ன ஸ்ரீ ம ந் ந ா ர ா ய ண ன் ஐ ந்து நி லை க ளி ல் இரு ப் ப தா க ச ா ஸ் த் ர ங் க ள்
கூறு கி ன் ற ன :

i)பர ரூபம் - ஸ்ரீவைகுண்டத்தில் உள்ள பரவாஸுதேவன் என்ற திவ்ய மங்கள ரூபம்.

ii) வ்யூஹ ரூபம் - வாஸுதேவனைத் தவிர மூன்று ரூபங்களை கொண்டு லோகங்களை வழி நடத்துவது - அதாவது, ஸங்கர்ஷணன் ( சமஷ்டி ஸம்ஹாரம் மற்றும் சாஸத்ரத்தை வெளியிடுவது), ப்ரத்யும்னன் (சமஷ்டி ஸ்ருஷ்டி மற்றும் தர்மத்தை நிலை நாட்டுவது) மற்றும் அநிருத்தன் (ரக்ஷணம் மற்றும் தத்வ உபதேசம் செய்வது)

iii) விபவ ரூபம் - ராமன், கண்ணன் போன்ற அவதார ரூபங்கள்.

iv) அர்ச்சா ரூபம் - சாஸ்த்ர நியமப்படி அமைத்த கோயில்களில் உள்ள, (வீடுகளிலும் உள்ள சாளக்ராம) ரூபங்கள்.

v)அந்தர்யாமி ரூபம் - எல்லோருடைய ஹ்ருதயத்தில் இருக்கின்ற ஸுக்ஷ்ம ரூபம்.

3. 'நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே தஸ்யாஸௌ ஸந்நிதிம் வ்ரஜேத்' அதாவது, எவன் ஒருவன் எண்ணத்தில் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் திருமேனி விஷயத்திலும், அந்த ஸ்ரீமந் நாராயணன் தான் பரம் பொருள் என்ற விஷயத்திலும் தெளிவான ஞானம் இருக்கிறதோ அவன் அருகில் ஸர்வேஸ்வரன் வந்து நல்வழி நடத்துகிறான்.

4. 'ஸர்வாதிஷாயி ஷாட்குண்யம் ஸம்ஸ்திதம் மந்த்ர பிம்பயோ: மந்த்ரே வாச்யத்மனா நித்யம் பிம்பே து க்ருபயா ஸ்திதம்' அதாவது, மந்த்ரங்களினால் சொல்லப் படுகிற பரவாஸுதேவனுக்கான

ஷாட்குண்யம் (ஆறு குணங்கள்), அர்ச்சா ரூபத்திலும் உள்ளன.அது ஆவன: ஞானம் (அனைத்தையும் எப்போதும் அறிபவன்), பலம் (ஸர்வத்தையும் தாங்குபவன்), ஐஸ்வர்யம் (அனைத்தையும் நியமிப்பவன்), வீர்யம் (மாறுதல் அற்றவன்), சக்தி (மிக எளிதாக எதையும் செய்வபவன்), தேஜஸ் (கண்டவுடன் வணங்கச் செய்பவன்).

5. 'ஆபீடான் மௌலி பர்யந்தம் பச்யத புருஷோத்தமம் பாதகான்யாசு நச்யந்தி கிம் புனச்தூப பாதகம்', அதாவது, ஸர்வேஸ்வரனான ஶ்ரீமந் நாராயணனின் அர்ச்சா ரூபத்தை திருவடி முதல் திருமுடி வரை ஸேவிப்பவர்களுக்கு பஞ்ச மஹா பாபங்கள் களையப் படுகிறது என்றால், அர்ச்சா மூர்த்தி ஸேவேயினால், சரணாகதன் செய்யும் சிறு பாபங்கள் களையப் படுவதை கூறவும் வேண்டுமோ?

6. 'ஸதீவ ப்ரிய பர்தாரம் ஜன்னீ இவ ஸ்தநனதயம். ஆசார்யம் சிஷ்யவன்மித்ரம் மித்ரவல்லாலயேத்தரிம்' அதாவது, சாளக்கராமத்துக்கு திருவாராதனம் செய்யும் காலத்தில், ஒரு பதிவ்ரதை தன் கணவனை எப்படி நேசிப்பாளோ, ஒரு தாய் தன் கைக்குழந்தையிடம் வாத்ஸல்யத்தை (வாத்ஸல்யமாவது, குறைகளைக் காணாது நல்லது செய்வது) எப்படி காட்டுவாளோ, ஒரு சிஷ்யன் தன் ஆசார்யனிடம் எப்படி கௌரவ புத்தியுடன் இருப்பானோ, ஒரு நண்பன் காட்டும் மித்ர பாவம் எப்படியோ, அது போன்ற உணர்வுகளை ஸர்வேஸ்வரன் பக்கலிலே, கொள்ள வேண்டும்.

7. 'யதா யுவாநம் ராஜானம் யதா ச மத ஹஸ்தினாம். யதா ப்ரிய அதிதிம் யோக்யம் பகவந்தம் ததார்ச்சயேத்', அதாவது, சாளக்கராமத்துக்கு திருவாராதனம் செய்யும் காலத்தில், ஸர்வேஸ்வரன் பக்கலிலே, ஒரு இளவரசனை உபசரிப்பது போல், மதங்கொண்ட யானையிடம் பயந்து நடப்பது போல், பிரியமான விருந்தாளியை கௌரவிப்பது போல், எண்ணம் வேண்டும்.

8.'கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன் என் உள்ளம் கவர்ந்தானை, அண்டர்கோன் அணி அரங்கன் என் அமுதினை, கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாதே' அதாவது, திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரானில்,

அனைத்தையும் நியமிக்கக்கூடிய திருவரங்கனைக் கண்ட கண்கள் அவன் நியமனத்தின் கீழ்

அடங்கி உள்ள அனைத்து உலக விஷயங்களிலும் மனம் செல்லாது என அர்ச்சா ரூபத்தில் காட்சி அளித்த திருவரங்கனை க் கண்டு மகிழ்கிறார்.

கைங்கர்யங்களை நியாயமாக ஈட்டிய பொருள்களில் செய்தல் :

1. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, பகவத் கைங்கர்யங்களாகிற நித்ய (சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள்) , நைமித்திக (சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸ்ரார்தம், ஏகாதசி விரதம் போன்றவை) மற்றும் காம்ய (ஞான சம்பாத்யம், கோவில் செல்லுதல் போன்றவை) கர்மங்களை செய்யும் போது, கைங்கர்யங்களை நியாயமாக ஈட்டிய பொருள்களினால் செய்தல் மிக அவசியம். இந்த சாஸ்த்ர முறைப்படி உள்ள பகவத் கைங்கர்யம் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. ஒவ்வொரு ஶ்ரீ வைஷ்ணவனும், ஆசார்யனால் செய்துவிக்கப் படுகிற 'சரணாகதி' அனுஷ்டானத்திற்கு முன்பு ஆசார்யன் ஸந்நிதியில் 'பஞ்ச ஸம்ஸ்காரம்' செய்து போக வேண்டும். 'பஞ்ச ஸம்ஸ்காரம்' அல்லது 'ஸமாச்ரயணம்' என்பது சாஸ்த்ரத்தில் ஒருவரை ஶ்ரீவைஷ்ணவர் ஆக நெறிப்படுத்தும் முறையாக விளக்கப்பட்டுள்ளது.

3. இந்த ச்லோகம் இதை நன்கு விளக்குகிறது: 'தாபப் புண்ட்ர ததா நாம மந்த்ரோ யாகஸ் ச பஞ்சம:' என்பதில் ஐந்து நடவடிக்கைகளும் சொல்லப்படுகின்றன.

# தாப: – உஷ்ணம் – சங்கமும் சக்ரமும் உஷ்ணப்படுத்தப்பட்டுத் தோள்களில் பொறிக்கப்படுவது

# புண்ட்ர – த்வாதச (12) ஊர்த்வ புண்ட்ரங்களை (திருமண், ஶ்ரீசூர்ணம்) உடலில் குறிப்பிட்ட பாகங்களில் தரித்தல்

# நாம – தாஸ்ய நாமம் தரித்தல். ஆசார்யனால் வழங்கப்படும் தாஸ்ய நாமம் 'ராமானுஜ தாசன்'

# மந்த்ர – மந்த்ரோபதேசம் (திருமந்தரம், த்வயம், சரமச்லோகம் இம்மூன்றும் நம் ஸம்ஸாரத் துயரங்களைப் போக்குவன)

# யாக – இல்லத்தில் தினமும் எம்பெருமானைத் தொழத் திருவாராதனக் கிரமத்தை அறிதல்

4. இந்த 'யாக' என்கிற திருவாராதனத்தைச் செய்யவும், நித்யம் நைமித்திகம் போன்ற கர்மாக்களை செய்யவும் மற்றும் இங்குள்ள காலம் சரீர யாத்ரைக்காகவும், பொருள் (பணம்) ஈட்டுவது மிக அவசியம். அப்பொருளை ஈட்டுவதை நியாயமான முறையிலும், பகவத் கைங்கர்யத்திற்காக என்ற எண்ணத்துடனும் செய்ய வேண்டும். அப்படி ஈட்டிய பொருளைக் கொண்டு திருவாராதனம், பெருமாளுக்கு சமர்ப்பிக்கும் தளிகை, அதன் பிறகு அந்த பகவத் ப்ரஸாதத்தை உண்பது என்ற அனைத்தும் உத்தரக்ருத்யத்தின் ஒரு அம்சம். அதே போல், நியாயமாக ஈட்டிய பொருளைக் கொண்டே நித்ய, நைமித்திக மற்றும் காம்ய கர்மாக்களை (அர்ச்சா மூர்த்தியாக எழுந்தருளி இருக்கும் கோவிலில் உள்ள பெருமாளுக்கு செய்யும் கைங்கர்யம் உட்பட) செய்ய வேண்டும்.

5. 'ததா ஹி யத்கார்யம் உபைதி கின்சித் உபாயனம் சோபஹிருதம் மஹார்ஹம். ஸா பாதுகாப்யாம் ப்ரதமம் நிவேத்ய சகார பஸ்சாத் பரதோ யதாவத்' அதாவது, ஶ்ரீராம பாதுகைகள் ராஜ்யத்தை ஆளும்போது, சிற்றரசர்களிடமிருந்து வந்து சேர்ந்த காணிக்கைகளை முதலில் பாதுகைகளிடம் விண்ணப்பம் செய்தே, மேலும் செய்ய வேண்டுபவனவற்றை பரதன் செய்தான். இந்த ராஜ சேவக கார்யத்தை பரதன் ஶ்ரீராம கைங்கர்யமாக நியாயமாக ஈட்டிய பொருள்களில் செய்து போனான் பரதன் என்கிறது ஶ்ரீமத் ராமாயணம்.

6. 'நாஸ்தி பித்ரார்ஜிதம் கிஞ்சித் ந மயா கிஞ்சிதார்ஜிதம், அஸ்தி மே ஹஸ்தி ஶைலாக்ரே வஸ்து பைதாமஹம் தனம்' அதாவது, ஸ்வாமி தேசிகன், 'வைராக்ய பஞ்சகம்' என்கிற ஸ்தோத்தரத்தில் அருளியது போல், 'நானாக சம்பாதித்த சொத்தும் எனக்கு கிடையாது, பரம்பரையாக வந்த சொத்தும் எனக்கு கிடையாது, ஹஸ்திகிரி பேரருளாளனே என்னுடைய சொத்து' என்கிற எண்ணம் கொண்டு இங்குள்ள காலம், ஒரு சரணாகதன், கைங்கர்யங்களை நியாயமாக ஈட்டிய பொருள்களினால் தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற கடமையாக நினைத்து செய்ய வேண்டும்.

